35 -16-

## கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. R.S. மாரியப்பன், பி.இ., எம்.பி.ஏ.,

திட்ட அனுமதி

நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்

ந.க.எண். **4338/2019/உதிகு-2**
திட்ட அனுமதி எண். **78அ.ஆ/2020**
உள்ளாட்சியின் பெயர்:சூலூர் பேரூராட்சி

நாள்: **05.2020**

பொருள் : திட்ட அனுமதி - கட்டிடம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம் - சூலூர் பேரூராட்சி மற்றும் கிராமம் - நில அளவு எண்கள்.71/1,2A,3A,4A மற்றும் 72/2A1, 2B1, 2C1, 2D1-ல் அமையும் **4.07.00** ஹெக்டேர் பரப்பில் தரைத்தளம் + மூன்று தளங்களில் **28728.0 ச.மீ** -ல் **1140** குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டது. தற்போது அம்மனையிடத்தில் 11Block –ல் G + 3 Floors –ல் **19479.68 ச.மீ -ல் 528** குடியிருப்பு வீடுகள் கட்ட திருத்திய வரைபட அனுமதி வழங்குதல் - தொடர்பாக

பார்வை :

1. மனுதாரர் நிர்வாகபொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம், அவர்களின் ந.க.எண்.962/AE(P)/2018 நாள. 22.07.2019.
2. மனுதாரர் நிர்வாகபொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம், அவர்களின் (Online Building Ref.No. 2020000302032063-02) விண்ணப்பம் நாள் 13.03.2020.
3. அரசாணை (நிலை) எண்.86, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 28.03.2012
4. அரசாணை (நிலை) எண்.85, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 16.05.2017
5. அரசாணை (நிலை) எண்.135, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 21.07.2017
6. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.21075/2009/பிஏ-1 நாள் 04.04.2012
7. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/Spl Cell நாள் 28.09.2017
8. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14227/2017/சிபி நாள் 14.12.2017
9. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019

10. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.7246/2011/LPA2 ) திட்ட அனுமதி எண்.210/2013 நாள் 12.08.2013
11. சூலூர் பேரூராட்சி அவர்களின் ந.க.எண்.438/2007/ஆ, நாள். 12.08.2013
12. சூலூர் பேரூராட்சி அவர்களின் தீர்மானம் எண். 36, நாள். 28.02.2001
13. தலைவர் / மாவட்ட ஆட்சிதலைவர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண். 1, நாள். 18.02.2019

*****

உத்தரவு:

கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம் - சூலூர் பேரூராட்சி மற்றும் கிராமம் - நில அளவு எண்கள்.71/1,2A,3A,4A மற்றும் 72/2A1, 2B1, 2C1, 2D1-ல் அமையும் **4.07.00** ஹெக்டேர் பரப்புள்ள மனையிடத்திற்கு **"A"** முதல் **"L"** வரை என எல்லையிட்டும், வரைபடத்திற்கு **ம.வ/கோ.உ.திகு. எண்.183/2013** என எண்ணிட்டு மனை ஒப்புதலும், அம்மனையில் அமையும் **28728.0** ச.மீ -ல் **1140** குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி எண். **திட்ட அனுமதி எண்.210அ,ஆ.இ/2013** என்ற எண்ணிடபட்டு ஏற்கனவே வழங்கப்பட்ட **28728.0** ச.மீ பரப்பு கொண்ட மனையிடத்தில் தற்போது **8769.60** ச.மீ கட்டிட பரப்பு போக **19479.68** ச.மீ **528** குடியிருப்பு வீடுகள் கட்ட திருத்திய வரைபட அனுமதி கோரப்பட்ட மனை வரைபடத்திற்கு **ம.வ/கோ.உ.திகு.எண்.59/2020** என எண்ணிட்டப்பட்டு மனையிடத்தில் குடியிருப்பு கட்டுமானத்தின் பரப்பளவு கீழ்கண்டவாறு அமைகிறது.

**Area Details:**

(i) ஏற்கனவே ஒப்புதல் பெற்ற வரைபடத்தின் பரப்பு பட்டியல்:

மனையின் பரப்பு : 40700Sq.m

| Floor | FSI Area $m^2$ | Non FSI Area $m^2$ | Total Area $m^2$ | In Useage |
|---|---|---|---|---|
| **Block – A** | | | | |
| G+3 Floors | 2721.60 | - | 2721.60 | 108 குடியிருப்பு |
| **Block - B** | | | | |
| G + 3 Floors | 26006.40 | - | 26006.40 | 1032 குடியிருப்பு |
| **Total** | **28728.00** | - | **28728.00** | 1140 குடியிருப்பு |

(i) தற்போது நிலையுள்ள வரைபடத்தின் பரப்பு பட்டியல்:

மனையின் பரப்பு : 40700Sq.m

| Floor | FSI Area $m^2$ | Non FSI Area $m^2$ | Total Area $m^2$ | In Useage |
|---|---|---|---|---|
| **Block – A** | | | | |
| G+2 Floors | 2721.60 | - | 2721.60 | 108 குடியிருப்பு |
| **Block - B** | | | | |
| G + 3 Floors | 6048.0 | - | 6048.0 | 240 குடியிருப்பு |
| **Total** | **8769.60** | - | **8769.60** | 348 குடியிருப்பு |

(ii) தற்போது அனுமதி கோரும் திருத்திய வரைபடத்தின் பரப்பு பட்டியல்:

மனையின் பரப்பு : 40700Sq.m

| Floor | FSI Area $m^2$ | Non FSI Area $m^2$ | Total Area $m^2$ | In Useage |
|---|---|---|---|---|
| **Block – 1** | | | | |
| G+3 Floors | 1770.88 | - | 1770.88 | குடியிருப்பு |
| **Block - 2** | | | | |
| G + 3 Floors | 1770.88 | - | 1770.88 | குடியிருப்பு |
| **Block – 3** | | | | |
| G+3 Floors | 1770.88 | - | 1770.88 | குடியிருப்பு |
| **Block - 4** | | | | |
| G + 3 Floors | 1770.88 | - | 1770.88 | குடியிருப்பு |
| **Block – 5** | | | | |
| G+3 Floors | 1770.88 | - | 1770.88 | குடியிருப்பு |
| **Block - 6** | | | | |
| G + 3 Floors | 1770.88 | - | 1770.88 | குடியிருப்பு |
| **Block – 7** | | | | |
| G+3 Floors | 1770.88 | - | 1770.88 | குடியிருப்பு |
| **Block - 8** | | | | |
| G + 3 Floors | 1770.88 | - | 1770.88 | குடியிருப்பு |
| **Block – 9** | | | | |
| G+3 Floors | 1770.88 | - | 1770.88 | குடியிருப்பு |
| **Block - 10** | | | | |

- 19 -

| | | | | |
|---|---|---|---|---|
| G + 3 Floors | 1770.88 | - | 1770.88 | குடியிருப்பு |
| Block - 11 | | | | |
| G + 3 Floors | 1770.88 | - | 1770.88 | குடியிருப்பு |
| Terrace Floors | - | 161.70 | 161.70 | மாடிப்படி கூண்டு |
| Total | 19479.68 | 161.70 | 19641.38 | 528 குடியிருப்பு |

உரிய கட்டணங்கள் ஏற்கனவே பெற்ப்பட்டுள்ளதால் உத்தேச கட்டுமானத்திற்கு <u>திட்ட</u> <u>அனுமதி எண்.78அ,அ/2020</u> என்ற எண்ணில <u>.05.2020</u> முதல் <u>.05.2025</u> வரை 5 (ஐந்து) வருட காலத்திற்கு கீழ்காணும் நிபந்தனைகளுடன் திருத்திய திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

## <u>சிறப்பு நிபந்தனைகள்</u>

| | சிறப்பு நிபந்தனைகள் |
|---|---|
| வ.எண் | |
| 1. | The project proponent / Applicant shall not commence any activity, excepting fencing of the site and construction of temporary shed for guard, without obtaining Environmental clearance under the EIA Notification, 2006 from the State Level Environment Impact Assessment Authority or the Ministry of Environment and Forests, Government of India, as applicable to the project, as per the threshold limits. Any violation from the above requirement is liable for action under section 19 of the Environment (Protection) Act, 1986, Environmental Clearance should be obtained before issue of planning permission. Since the construction commenced.<br>Environmental Clearance (EC) Letter No.SE1AA/TN/F.4709/EC/8(a)/451/2015. dated 04.03.2016 பெறப்பட்டுள்ளது. |
| 2. | கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அவற்றிற்கான அணுகு வழி ஆகியவற்றை தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். பத்திர நகல்கள் இவ்லுவலகத்திற்கும் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கும் ஒரு வார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும். |
| 3. | பொது ஒதுக்கீடு திறவிடமான பூங்கா பரப்பு பத்திர எண்.2185/2000 –ல் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. |
| 4. | பொது ஒதுக்கீடு திறவிடத்தினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக்கொண்டு அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்மந்தப்பட்ட அலுவலகம் உறுதி செய்து கொள்ள வேண்டும். |
| 5. | It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and |

ண்:- 228/2020
ந.க.எண்:30 /2020–2021

# சூலூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு/திருமதி மு. செந்தில்குமார்

-26-

43

நாள்:08-07-2020

பொருள்: கட்டிட உரிமம் சூலூர் பேரூராட்சி – வார்டு எண்: WD-01, அய்யன் திருவள்ளுவர் நகர் – க
கட்டிட சர்வே எண் : 71/1, 2A,3A,4A, 72/2A1, 2B1, 2C1, 2D1, மனை எண் : – –ல் குடியிருப்புக் கட்டிடம் க
கட்ட அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது

பார்வை: திரு/திருமதி :தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் த/பெ,க/பெ :–
என்பவரிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பம் எண் :30 நாள் :08–07–2020

ஆணை:

சூலூர் பேரூராட்சிக்குட்பட்ட கட்டிட சர்வே எண் : 71/1, 2A,3A,4A, 72/2A1, 2B1, 2C1, 2D1, மனை எண் :
– – ல், திரு/திருமதி :தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் – த/பெ,க/பெ :– என்பவர் தரைதளம் 209677.50 ச.மீ / ச.அ, தாங்க கட்டிடம் கட்டிக்கொள்ள பார்வையில் காணும் விண்ணப்பத்தில் கேட்டுள்ளார்.
வரைபடம் நகல் சமர்ப்பித்துள்ளார்.

விண்ணப்பம் விரிவாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது.

1. இந்த அனுமதி 08-07-2020 முதல் மூன்று வருட காலத்திற்கு அதாவது 07-07-2023 வரை அமுலில் இருக்கும்.
2. பேரூராட்சி நிலத்தில் அல்லது தெருவில் எந்த வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
3. பொதுப்பாதையிலிருந்து 3 மீட்டர் தூரத்தில் நிலையான கட்டிடங்கள் ஏதும் கட்டக்கூடாது. சுற்றுச்சுவர் கட்டிக் கொள்ளலாம்.(சுற்றுச்சுவர் 1 மீட்டருக்கு மேற்படாமல்).
4. கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு மண் எடுக்கக்கூடாது.
5. அங்கிகாரம் செய்யப்பட்ட பிளானுக்கு எவ்வித மாறுதலும் இல்லாமல் கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதல் செய்வதாக இருந்தால், முன்கூட்டியே அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
6. கொடுக்கப்பட்டுள்ள தவணைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லையானால் அதற்கு (30) முப்பது நாட்களுக்கு முன்னதாகவே மனு கொடுத்து நிர்ணயக்கப்பட்டுள்ள கட்டணம் செலுத்தி அனுமதி காலவரம்பை நீட்டித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமல் கட்டிட வேலை செய்யக்கூடாது.
7. கட்டிட வேலைநடக்குமிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தின் நகல் ஒன்று வைக்கப்படுவதுடன் பேரூராட்சி அலுவலர் அவர்களின் பார்வைக்கு வேண்டும்போது ஆஜர் செய்ய வேண்டும்.
8. கக்கூஸ்,சாக்கடை,தொட்டி முதலியன சுகாதார முறைப்படி தளம் போடப்பட வேண்டும். எளிதாக சுத்தம் செய்ய வசதியாக உள்ளதாகவும் இருக்க வேண்டும்.
9. புது சென்னை சட்டப் பிரிவுகள் 26 மற்றும்–33 விதிகளின் படி அத்தாட்சி பெறாமல் குடியேறவோ குடிவைக்கவோ கூடாது.
10. கட்டிடம் கட்டி முடித்த அல்லது குடியேறிய 15 தினங்களுக்குள் அவ்விவரம் செயல் அலுவலர் அவர்களுக்கு தெரியப்படுத் துவதுடன்,கட்டிடத்தின் முடிவான வரைபடம் ஒன்றும் அனுப்பி வைக்க வேண்டும்.
11. தற்போது செலுத்தப்பட்ட தொகை பின்பு குறைவெனத் தெரியவந்தால் உடனே மீதித் தொகையை பேரூராட்சியில் செலுத்தப்பட வேண்டும்.
12. கட்டிடம் கட்டுமிடத்தில் மழை நீர் சேகரிக்கும் தொட்டி கண்டிப்பாக கட்ட வேண்டும்.
13. சூரிய ஒளியனைப் பயன்படுத்தி தண்ணீரை சூடாக்கும் உபகரணம் பொருத்தப்பட வேண்டும்.
14. அனுமதிக்காக வழங்கப்பட்ட ஆவணங்களில் தவறுகள் ஏதும் பின்னாளில் கண்டறியப்பட்டால் தங்களது கட்டிட உரிம அனுமதி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

மேலே கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் நகல் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு, அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் இரண்டு நகல்

பெறுநர்,

திரு/திருமதி : தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்
த/பெ,க/பெ : – ,
WD-01,அய்யன் திருவள்ளுவர் நகர்
சூலூர்

செயல் அலுவலர்
சூலூர் பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்

நகல் : வரி வசூலர், சூலூர் பேரூராட்சி
( கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் வரிவிதிப்பு செய்ய உரிய நடவடிக்கைக்காக. )

8/7/2020

TRUE COPY

9/7

Executive Engineer
T.N.S.C.B-CBE-26